திரு. கே. ராஜாராம் : பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் வேலைகளுக்குக்கூட சிமிண்ட் கிடைக்காமல் அவைகளின் வேலைகள் செய்ய மிகவும் கஷ்டமாக இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. வி. ராமையா : நான் முன்பே கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன்னேன். பஞ்சாயத்து வேலைகளுக்கு மட்டுமல்ல. அரசாங்கத்தினுடைய வேலைகளுக்குக்கூட முக்கியமான பிராஜெக்டுகளுக்குக்கூட போதுமான அளவு சிமிண்ட் கிடைக்காமல் கஷ்டமாக இருக்கிறது. அதைத் தொடர்ந்து பரிசிலனை செய்வது அவ்வப்போது எப்படி அந்தக் கஷ்டங்களை நீக்க முடியுமோ அதற்கு முயற்சி எடுத்து அதற்கான வழிவகைகளை அரசாங்கம் செய்துவருகிறது.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் : பத்து, 15 வருஷ காலமாகத்தான் எல்லாவற்றிற்கும் சிமிண்ட் என்று சொல்லுகிறார்கள். இதற்கு முன் அநேகம் கட்டிடங்கள் சுண்ணாம்பால் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் இஞ்சினியர்களை இதுபற்றி விசாரித்து சிமிண்ட் மாத்திரம்தான் வேண்டுமா, சுண்ணாம்பு போன்றவற்றை உபயோகிக்கலாமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. வி. ராமையா : இந்த நல்ல ஆலோசனையை நான் பரிசீலனை செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். குறிப்பாக இன்றைக்குள்ள நிபுணர்கள், வேலை துரிதமாக நடக்க சிமிண்ட்டை உபயோகிப்பதாகச் சொல்கிறார்கள். பழைய முறையில் சுண்ணாம்பு மற்ற பொருள்களைக் கொண்டு கட்டிடங்களைக் கட்டுவதற்கு அதிக காலம் தேவைப்படுகிறது என்ற நினைப்பு இருக்கிறது. நான் இப்போது இந்தப் பதிலோடு நிறுத்திவிடப்போவதில்லை. கனம் அங்கத்தினர் ஆலோசனையை மனதில் கொண்டு மற்ற இன்ஜினியர்களுடன் பேசி விவாதிக்கத் தயாராக இருக்கிறேன்.

Punnakail-Attur road

* 166 Q.—SRI J. PONNUSWAMY VILLAVARAYAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken or proposed to be taken to complete the work on the Punnakail-Attur road in Tirunelveli district?

THE HON. SRI V. RAMIAH : Work of repairing the portions of the road damaged by floods in 1961 is in progress.

Kotwal bazaar

* 167 Q.—DR. A. SREENIVASAN AND VIDWAN T. MUTHUKANNAPPAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the insanitary condition of the Kotwal bazaar and its environments ; and